கடற்கரை கவியரங்கு - 633. நாள் 07-01-2024.



## எது அறம்?

அடுத்தவரை வருத்தாத, உள்ளத்தை உறுத்தாத
சொல்லும் செயலுமே அறமாம்!

நேர்மைக்கு நான் என்றும் நீதிக்கு தன் செயல் என்றும்
நினைக்கின்ற மனமெல்லாம் அறமோ?

பசியால் உண்ண எடுத்தவனை, பார் முழுதும் ஓலமிட
அடித்தே துன்புறுத்தல் அறமோ?
பசியோடு இருப்பவனை பக்கத்தில் வைத்துக் கொண்டு,
வயிறார உண்பதுவும் அறமோ?

அறம் என்று பலவும் சொல்லி ஆர்ப்பரிக்கும் கூட்டம் எல்லாம்,
அறம் என்று வாழ்வியலில், ஐயன் சொன்னதையும் அறிவாரோ?

தன் பார்வை சரி என்று, தானே நினைத்திருந்து,
வாழ்வது தான் அறமோ!

எவ்வுயிரும் தம் உயிர் போல், எண்ணும் மனம் வேண்டும்!
ஒவ்வொரு உயிருக்கும், ஓர் நிலை இருக்கும்!
உண்மையை அறிந்து, உயிர்ப்பித்து வாழ்தலே அறமாம்!

நாய்க்கு ரொட்டி தந்து, ஆவுக்கு அகத்திக்கீரை தந்து,
புண்ணியம் தேடும் ஒரு கூட்டம்! அடுத்து பக்கத்தில் பசியால்
வருந்தும் மானுடத்தை அறியார்!

படைத்த இறையவனே, பக்குவமாய் வாழ்வதற்கு,
பிரிதொன்றை உணவாக்கி மகிழ்ந்தான்!

எல்லா உயிர்களுமே இயற்கை வழி சென்று விட,
மானுடன் தான் தனிப்பாதை வகுத்து வைத்து,
தமதென்றும் எனதென்றும் தறிகெட்டு ஓடுகின்றான்!

அறத்தை அறியாமல் புண்ணியத்தை தேடுகின்றான்!
அன்பை நிலையாக்கி அறமாக வாழ்ந்துடுவோம்!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
07-01-2024 (காலை 6.00)